2013 மே 13]

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படுகின்ற சாலை. ஆகவே, இப்போது நில ஆர்ஜிதப் பணிகள் 85 சதவீதம் முடிந்திருக்கின்றது. 5 கிராம மக்களுக்கு பட்டாதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. எஞ்சியவர்களுக்கும் விரைவாக அந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு, அந்தப் புறவழிச்சாலைப் பணி துவங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நாஞ்சில் முருகேசன் அவர்கள்.*

திரு. அ. நாஞ்சில் முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 477, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

477—

நியாய விலைக் கடை

***11325—திரு. சு. ரவி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, தணிகைபோளூர் ஊராட்சி, ஸ்ரீராகவேந்திரா நகரில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தணிகைபோளூர் ஊராட்சி, ஸ்ரீராகவேந்திரா நகர் பகுதியில் 128 குடும்ப அட்டைதாரர்கள் மட்டும் உள்ளனர். மேலும், தற்போது வாணியம்பேட்டை நியாய விலைக் கடையில் வாரத்தில் 3 நாட்கள், அத்தியாவசியப் பொருட்களை சிரமம் இல்லாமல் அவர்கள் பெற்றுவருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலைவனத்தில் நடைபயின்ற தமிழகத்தை, பசுமைச் சோலைக்குள் அழைத்துச் சென்று, பொது விநியோகத் திட்டத்திலே பசிப்பிணி போக்க விலையில்லா 20 கிலோ அரிசி வழங்கி, பசியாற அம்மா உணவகம் தந்து, வெளிச் சந்தையிலே அரிசி விலையைக் கட்டுப்படுத்திட ஒரு கிலோ அரிசி 20 ரூபாய்க்கு வழங்கி, இந்தியாவில் உள்ள முதல்வர்களுக்கெல்லாம் முன்னோடி முதல்வராக விளங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதம், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

வேலூர் மாவட்டம், எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட, தணிகைபோளூர் ஊராட்சி, ஸ்ரீராகவேந்திரா நகரிலே, 149 குடும்ப அட்டைதாரர்கள் வசித்து வருகிறார்கள். முதியோர், பெண்கள் எல்லாம் அரசு வழங்கும் நுகர்பொருட்களைப் பெறுவதற்கு ஒன்றரை கிலோ மீட்டர் தூரமுள்ள வாணியம்பேட்டை நியாய விலைக் கடைக்குச் சென்று வர மிகவும் சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, அங்கு 128 குடும்ப அட்டைகள் உள்ளதால் பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு அரசின் விதிக்கு உட்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்கள். ஸ்ரீ ராகவேந்திரா நகரைச் சுற்றியுள்ள திருவள்ளுவர் நகர், நாகாலம்மன் நகர், எம்.ஜி.ஆர். நகர் ஆகிய பகுதிகளிலே 67 குடும்ப அட்டைகள் உள்ளன. வேறு கிராமத்திலிருந்து வந்து அங்கே குடியேறியுள்ளதால், தற்போது அந்த 67 குடும்ப அட்டைதாரர்களும் இடமாற்றம் செய்வதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள். எனவே, அந்தப் பகுதியிலே

2013 மே 13]

இன்றைக்கு 216 குடும்ப அட்டைகள் உள்ளதால், ஸ்ரீ ராகவேந்திரா நகரிலே ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள ஸ்ரீராகவேந்திரா நகரில், புதிய பகுதி நேரக் கடை அமைப்பதற்கு நிபந்தனைகள் முழுமையாகப் பூர்த்தி ஆகாத நிலையில், அதாவது 150 குடும்ப அட்டைகள் தேவை என்கின்ற நிலையில், 128 குடும்ப அட்டைகள்தான் அந்தப் பகுதியிலே தற்போது உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியிலே அவசியம் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, புதிதாக குடும்ப அட்டைகள் கோரி விண்ணப்பித்திருப்பவர்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஆய்வின் அடிப்படையில் தகுதியானவர்களுக்கு உடனடியாக குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் ஒரு கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3 இலட்சத்து 16 ஆயிரம் மெட்ரிக் டன் விலையில்லா அரிசியை வழங்கி, தமிழக மக்களுக்கு முழுமையான உணவுப் பாதுகாப்பு வழங்குகின்ற மாசற்ற மக்கள் தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, நடவடிக்கை மேற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலே கொடுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே, அந்தப் பகுதியிலே பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்ற நல்ல பதிலை

வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன், நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 478, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

478—

தடுப்பணை

***26697—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமத்திலுள்ள க.ச. எண்கள் 366, 341 மற்றும் 321-இல் தடுப்பணைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமம் க.ச. எண்கள் 366, 341 மற்றும் 321-ல் தடுப்பணைகள் கட்டப்படுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். திருப்பூர் மாவட்டம், ஜல்லிப்பட்டி கிராமம் புல எண் 366 இல் உள்ள காட்டோடையானது ஈசல் தட்டுமடைப் பகுதியில் உற்பத்தியாகி, அருகிலுள்ள திணைக்குளத்தில் சேர்கிறது. இந்த நீரோடையின் நீர்ப்பிடிப்புப் பரப்பானது மிக மிகக் குறைவாக உள்ளது. புல எண் 366-ன்கீழ் சுமார் 1 கி.மீ. தொலைவில் ஆயக்கட்டுப் பகுதியில் பயன்பெறும் கிணறுகள் ஏதும் இல்லை. மேலும், ஓடையின் அகலம் 5 மீட்டருக்குக் குறைவாகவே உள்ளது. எனவே, இங்கே தடுப்பணை அமைப்பதற்கு தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.